

சிவ சிவ

மன்னார் திருக்கேதீச்சரம்

# அம்மை அப்பன் அருட் பாமாலை





அம்மை அப்பன் அருட்பாமாலை இறுவட்டு
வெளிவர நிதி தந்து பலம் சேர்த்தவர்கள்
சிவனருள் இல்லம், திருக்கேதீச்சரம்.



கௌரி அம்பாள் உடனுறை
திருக்கேதீச்சரப் பெருமான்
மகிழும்

# அம்மை அப்பன் அருட்பாமாலை

ஆக்கியோன்

கவிஞர் வேலணையூர் சுரேஷ்

| | | |
|---|---|---|
| நூல் | : | அம்மை அப்பன் அருட்பாமாலை |
| ஆக்கியோன் | : | வேலணையூர் சுரேஷ் |
| பக்கங்கள் | : | 30 |
| முதற்பதிப்பு | : | மாசி, 2016 |
| பிரதிகள் | : | 500 |
| இரண்டாம் பதிப்பு | : | பங்குனி, 2016 |
| பிரதிகள் | : | 1500 |
| வெளியீடு | : | அமரர் சரண்யா நினைவாக அவரது குடும்பத்தினர் |
| அச்சுப்பதிப்பு | : | நோபிள் அச்சகம், யாழ்ப்பாணம். |

**இறுவட்டு வெளியீடு**

| | | |
|---|---|---|
| நிதி அனுசரணை | : | சிவன் அருள் இல்லம், திருக்கேதீச்சரம். |
| இசை | : | திரு.கோ.சத்தியன் |
| பாடியவர் | : | செல்வி வ.வைஸ்ணவி (சுவிஸ்) |
| ஒலிப்பதிவு | : | சப்தமி கலையகம், யாழ்ப்பாணம் |



இக்கைநூலை மீள்பதிப்பு செய்வதற்கும்
இறுவட்டினைப் பிரதி எடுப்பதற்கும்
ஆக்கியோனின் அனுமதி பெறப்படவேண்டும்.


# எழிற்கோலம் தன்னில் தோன்றும் அருட்கோலம்



மன்னார் திருக்கேதீச்சரம்

கௌரி அம்பாள் உடனுறை

திருக்கேதீச்சரப் பெருமான்


ஆலயத்திற்கேயுரிய தனித்துவமான
வழிபாடுகளில் ஒன்று கோமாதா பூசை

## அருள்மிகு திருக்கேதீச்சர ஆலய அந்தணப் பெருந்தகைகளின் ஆசியுரை

### அனைவரும் அன்புடன் பாடி அருள்பெற வாழ்த்துகிறோம்

சிறுவர் முதல் பெரியவர் வரை அன்பாய்ப் பாடி இன்பமுடன் இன்னருள் பெறும் வகையில், திருமதி வல்லிபுரம் சின்னப்பிள்ளை அவர்களின் கேதீச்சரநாதர் மேலுள்ள பற்றால் தோன்றிய சிந்தனையில் அவருக்கு அனைத்து வகையிலும் உதவி ஊக்கமளித்து அழகுற இன் தமிழில் பாமாலை புனைந்து "அம்மை அப்பன் அருள் பாமாலை" யாய் அனைவரின் கைகளிலும் அடக்கமாகப் பயன்பெறத்தக்க வகையில் ஆக்கிய வர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

அம்மை அப்பன் அருளுடன் அவர்கள் இம்மலரைச் சிறப்பாக வெளியீடு செய்ய வாழ்த்தி ஆசி கூறுகின்றோம்.

**சிவஸ்ரீ பஞ்சாட்சர பாலசுப்பிரமணியக்குருக்கள்**
**சிவஸ்ரீ தி. கருணானந்தக்குருக்கள்.**
(ஆலய பிரதமகுரு)

சிவசிவ

அருள்மிகு திருக்கேதீச்சர ஆலயத்
திருப்பணிச்சபை இணைச்செயலரின்

# வாழ்த்தியலுரை

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன், பேரானந்தப் பேரொளி சொரியும் திருக்கேதீச்சர நாதன். கற்றோரும் கல்லா ஞானமுடையோரும் பாடிப்பரவிய ஈசனை தானும் பாடிப் பரவிட வேண்டுமென்ற அவாவுந் தலால் அம்மை அப்பர் இல்லத்து அம்மையாரும் தக்க ஞானமுடையாரை நாடி இப்பாமாலையைத் தொடுப் பித்துள்ளார். அவர்தம் செயற்பாட்டைப் போற்றி வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

இம் மலரினைப் புதிய முறையில் பின்னிப் பழைய முறைகளையும் புராணத்தரவுகளையும் உள்வாங்கிய தகைசான்ற அன்பரைப் போற்றிசை செய்கிறேன்.

அன்பரின் செய்யுள் அமைப்பில் ஓர் புதுமை யைக் காண முடிகிறது. அவரது ஈரடிப் புனை வில் ஒரு சீரில், உயிரெழுத்தும் உயிர்மெய்யெழுத்தும் விரவியுள்ளமை புதுமையென்றெண்ண விழைகின் றது.

முதல் சீர்களில் "அ" முதல் "ஔ" வரை உயிரெழுத்துக்களாலும், "க" கரம் முதல் "வ"கரம் வரை உயிர்மெய்யெழுத்துக்களாலும் வரன் முறையாகத் தொடுத்துள்ளமை சீரிய சிந்தனைப் பிறப்பெனக் கூறின் மிகையன்று.

இச் செந்நெறிச் செயற்திறனைச் செய்விக்க எண்ணிய அம்மை அப்பன் இல்லச் "செம்மனச்செல்வி"யையும், அவரது எண்ணம் ஈடேற துணை செய்தோரையும் நினைந்துருகி வாழ்த்தொலி பகர்ந்து போற்றிசைப்பதில் பெருமகிழ்வுறுகிறேன்.

இந்நூல்தனைக் கிடப்பில் விடாது அன்பர்கள் அடியார்கள் பாடிப்புகழ்ந்து கடைத்தேற வேண்டுகிறேன்.

"மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்"

**புலவர் அ.திருநாவுக்கரசு**
(இணைச் செயலாளர்)

# முதனிலையில் முதல்வனைப் போற்றிடும் அருட்பாமாலை

நாடறிந்த கவிஞர் வேலணையூர் இராமச்சந் திரன் சுரேஷ் அவர்களது கவித்துவத் திறனில் யாத்த மைக்கப்பெற்ற பாமாலையே கேதார கௌரியம்பாள் சமேத கேதீச்சரநாதர்மீது புனையப்பெற்ற இவ்வருட் பாமாலையாகும்.

தொண்டர் நாளும் தொழுதேத்தித் துதிசெய்ய அருள் செய்யும் எம் இறைவனே தமிழில் தோன்றியமுதல் இலக்கண நூலாகிய "அகத்தியத்தை" எழுதிய அகத் திய முனிவருக்குத் தமிழ் கற்பித்தவர். அத்தகைய இறை வனுக்கு இலக்கண வரம்புகளுக்குள் நின்று முத னிலை எழுத்துக்களாகத் தமிழில் வருகின்ற இருபத்தொரு எழுத்துக்களுள் ஞகர, யகரம் தவிர்ந்த ஏனைய எழுத் துக்களை முடிந்தவரை உள்ளடக்கி வேலணையூர் இ.சுரேஷ் அவர்கள் அற்புதமாகக் கவியாக்கியுள்ளார்.

பூமாலை புனைந்தேத்தும் என் பெருவிருப்பும் எதிர்பார்ப்பும் இன்று நிறைவேறி அம்மை அப்பன் அருட்பாமாலையாக வெளிவருவது திருவருட் செயலென எண்ணி உவகையடைகிறேன். இவ் அம்மையப்பன் அருட்பாமாலையை அனைவரும் போற்றிப் புகழ்ந்து பாடிப் பணிந்து பரம்பொருளின் இறையருள் பெற்றுய்ய வேண்டி அம்மை அப்பன் பாதம் பணிந்து அமைகின்றேன்.

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

**திருமதி.சி.வல்லிபுரம் (நிறுவுனர்)**
அம்மை, அப்பன் இல்லம், திருக்கேதீச்சரம்,
மன்னார்.

## மன்னார் இந்து மகாசபையின் பாராட்டும் வாழ்த்தும்

அன்று, 7ஆம் 8ஆம் நூற்றாண்டுகளில் சம்பந்தர், சுந்தரர் ஆகிய நாயன்மார்களினால் பாடல் பெற்ற திருத்தலம் திருக்கேதீச்சரம். இன்று, 2016ல் கௌரியம்பாள் உடனுறை திருக்கேதீச்சரநாதர் - அம்மை அப்பனுக்கு - ஒரு அருட்பாமாலை இயற்றி இறுவெட்டும் கைநூலும் வெளியிடப்படுகின்றது.

தாயகக் கலைஞர்களான வேலணையூர் இ.சுரேஷின் ஆக்கத்தில், கோ.சத்தியனின் இசை யில், "இன்குரல் செல்வி" வ.வைஸ்ணவியின் (சுவிஸ்) குரலில், வே.பொ.மாணிக்கவாசகரின் விடாமுயற்சியில், கேதீச்சர நாதனுக்கு ஆக்கப் பட்ட இறுவெட்டும், அருட்பாமாலை கைநூலும் காலத்தின் தேவையாகவேயுள்ளது.

ஐந்து சிவத்தலங்களை உள்ளடக்கிய ஈழத்திருநாட்டில் முன்னைய காலத்தில் இந்து மக்கள் சீரும் சிறப்போடும் உரிமையோடும் வாழ்ந்தனர்.

இத்தலங்கள் ஒவ்வொன்றும் மறைந்தும் மறைக்கப்பட்டும் சென்றுகொண்டிருக்கும் இவ் வேளையில், திருக்கேதீச்சரச் சிவத்தலம் பற்றிய இப்பாடல்களைப் பாடும், பாடக்கேட்கும் யாவருக் கும் மனதில் உற்சாகமும் திருக்கேதீச்சர நாதனின் அருளும் கிடைக்கப்பெறும் என்பது எமது திடமான நம்பிக்கையாகும்.

"அம்மை அப்பன் அருட்பாமாலையை ஆக்கி வெளியிடுகின்ற உத்தமர்களைப் பாராட்டி, இது அனைவருக்கும் பயனுள்ள வகை யில் அமைய திருக்கேதீச்சர நாதனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**டாக்டர் மு. கதிர்காமநாதன்** (செயலாளர் நாயகம்)

**செ.சி.இராமகிருஸ்ணன்** (தலைவர்)

## வெளியீட்டுரை

**இக்கைநூல் உருவான கதை**

ஈழமணித் திருநாட்டின் ஆன்மீகச் சுவாசக் காற்றின் உயிர்மூச்சாக விளங்குவது திருச்கேதீச்சரத் திருத்தலமாகும். பாடல்பெற்ற புராதன இத்தலத்தைத் தரிசிக்கவும், இப்புனித புண்ணிய மண்ணினை ஸ்பரிசிக்கவும் வாய்ப்பினைப் பெற்றவர்கள் பாக்கியசாலிகளே. 1980 களிலிருந்து இவ்வாலயத் திருப்பணிச் சபையின் உறுப்புரிமையும், 1990களின் பிற்பகுதியிலே கட்டடங்கள் திணைக்களத்தினூடாக முன்னெடுக்கப்பட்ட புனரமைப்பு வேலைகளை நிறைவேற்றுகின்ற பொறுப்பும், 2005இல் உருவாக்கப்பட்ட "சிவன் அருள் இல்ல"த்தின்மூலம் இத்திருத்தலத்திலே சைவசமயத்தையும் சைவசமூகத்தையும் ஒன்றிணைத்து மனிதாபிமானப் பணியாற்றுகின்ற வாய்ப்பும் எம்பெருமானால் எனக்கு வழங்கப்பட்ட பெரும் வரங்களாகவே நான் உணர்கின்றேன்.

அரசசேவையிலிருந்து நான் இளைப்பாறி மன்னாரைவிட்டு வெளியேற நேர்ந்தபோது, திருக்கேதீச்சரத்துடனான எனது உறவும் தொடர்பும் அறுந்துவிடுமோ என்ற அச்சம் எனக்குள் ஏற்பட்டது. எனது மனக்குறையைப் போக்கவோ என்னவோ எம் பெருமான், அம்மை அப்பன் இல்ல நிறுவுனரான அம்மா மூலம் இக்கைநூலை உருவாக்கும் பணியை என்னிடம் ஒப்படைத்தார்.

எனது அன்புக்குரிய மருகர் வேலணையூர் சுரேஸ் இதனை வெகு கச்சிதமாகவும் கனதியாகவும் யாத்துத்

தந்தார். பின்பு எம் இருவரது மனத்திற்கும் திருப்தி தரும்வரை இருவரும் வரிவரியாக இதனை ஆராய்ந்து விவாதித்து செதுக்கிச் செதுக்கிச் செப்பனிட்டோம். தம்பி சுரேஸின் தனித்துவமான கவித்துவ ஆற்றலும், ஏதோ எம்பெருமான் எனக்களித்த ஓரளவு தமிழ்மொழி அறிவும் முழுமையாக இப்பணியிலே சமர்ப்பணமாகி இதனைப் புடம்போட உதவியது. முடிந்தவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சி இது.

இதனை இசைவடிவில் வெளியிடுவது தொடர்பில் எனது இனிய 'நட்பின் இலக்கணம்' சிவன் அருள் இல்ல நிறுவுனர் வைத்தியகலாநிதி ஜெயேந்திரன் நமசிவாயம் அவர்களின் நிதி அனுசரணை போற்றுதற்குரியது. திரு.சுரேஷின் அறிமுகத்தினாலும் நட்பினாலும் திரு. முரளி (கோ.சத்தியன்) செல்வி வ. வைஸ்ணவி ஆகியோர் இப்பணியில் வலிந்துதவ முன்வந்தனர்.

இதனை கைநூலாக வெளியிடும் பொறுப்பினை எமது மகள் அமரர் சரண்யாவின் இருபத்தைந்து ஆண்டுகள் நினைவாக எமது குடும்பம் சார்பாக ஏற்றுக் கொண்டோம்.

இப்பாடல்களை இவ்வாலயத்திலும் உங்கள் வீடு களிலும் பொருத்தமான பிற இடங்களிலும் பாடுவதும் பாடி எம்பெருமானை மகிழ்வித்துப் பயன்பெறுவதும் இனி உங்களது கைகளில்......

சிவன் அருள் இல்லம்,
திருக்கேதீச்சரம்.

**வே.பொ.மாணிக்கவாசகர்**
(நிர்வாக ஆலோசகர்)

# திருக்கேதீச்சரத்தைச் சுட்டிய தேவார புராணங்கள்

## சம்பந்தர் தேவாரம்

**திருச்சிற்றம்பலம்**

விருது குன்றமா மேருவில் நாணர
வாவனல் எரிஅம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக்
கடுவினை யடையாவே.

## திருநாவுக்கரசர் தேவாரம்

பூதியணி பொன்னிறத்தர் பூண் நூலர்
பொங்கரவர் சங்கரர் வெண்குழையோர் காதர்
கேதீச்சர மேவினார் கேதாரத் தார்
கெடில வடவதிகை வீரட்டத்தார்
மாதுயரந் தீர்த்தென்னை யுய்யக் கொண்டார்
மழபாடிமேய மழுவாளனார்
வேதிகுடி யுள்ளார் மீயச் சூரார்
வீழி மிழலையே மேவினாரே.

## சுந்தரர் தேவாரம்

ஈழநாட்டு மாதோட்டந் தென்னாட்டி ராமேச்சரஞ்
சோழநாட்டுத் துருத்தி நெய்த்தானந் திருமலை
ஆழியூரன் நாட்டுக் கெல்லா மணியாகிய
கீழையில் லரனார்க் கிடங்கிள்ளி குடியதே.

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே

## சேக்கிழார் பெரிய புராணம்

அந்நகரில் அமர்ந்தங் கண்இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார் தமைப்போற்றி வணங்கிப்பாடிச்
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச்சரத் தண்ணல் செய்யபாதம்
உன்னிமிகப் பணிந்தேத்தி அன்ப ரோடும்
உலவாத கிழிபெற்றார் உவகையுற்றார்.

மன்னுமிரா மேச்சரத்து மாமணியை முன்வணங்கிப்
பன்னுதமிழ்த் தொடைசாத்திப் பயில்கின்றார் பாம்பணிந்த
சென்னியர்மா தோட்டத்துத் திருக்கேதீச்சரஞ் சார்ந்த
சொன்மலர்மா லைகள்சாத்தித் தூரத்தே
தொழுதெழுந்தார்.

***திருச்சிற்றம்பலம்***

சிவசிவ

## கௌரி அம்பாள் உடனுறை
## திருக்கேதீச்சரப் பெருமான் மகிழும்

# அம்மை அப்பன்
# அருட்பாமாலை

### *பிள்ளையார் காப்பு*

*என் கருமம் யாவி னிற்கும்*
*முன் நின்று காக்குமென்*
*கண் கண்ட தெய்வம் - கரிமுகத்து*
*கற்பக விநாயகா காப்பு*

### *துதி*

*ஆதார மாயெனக்கு எல்லாமு மாகினை*
*கேதார நாதா கௌரியம்மா துணை - ஆதலால்*
*அம்மையே அப்பா அகமகிழ் இப்பாமாலை*
*செம்மையுறச் செய்தேன் துதி*

### தொடுப்பு

*கேதீஸ்வரா நம கேதீஸ்வரா நம*
*கேதீஸ்வரா நம கேதீஸ்வரா*
*கேதீஸ்வரா நம கேதீஸ்வரா நம*
*கேதீஸ்வரா நம கேதீஸ்வரா.*

அ

1. அரிகர சிவஓம் ஓம்சதா சிவஓம்
அம்மையே அப்பா கேதீஸ்வரா (கே)

2. ஆதாரம் உந்தன் பாதாரம் ஒன்றே
ஆட்கொண்டு அருள்வாய் கேதீஸ்வரா (கே)

3. இசையமு தாலே இராவணன் வணங்க
இசைந்தருள் புரிந்தாய் கேதீஸ்வரா (கே)

4. ஈழமணி நாட்டின் இலங்கிடும் மாந்தைப்
பதியுறை இறைவா கேதீஸ்வரா (கே)


5. உலகாளும் ஈசா உமையாள் மணவாளா
உன்தாள் சரணம் கேதீஸ்வரா (கே)

6. ஊழி முதல்வனாய் நின்ற ஈசனே
ஏழை பங்காளனே கேதீஸ்வரா (கே)

7. எண்குணத் தோனே எமையாளு மிறையே
ஏறணி கொடியுடை கேதீஸ்வரா (கே)

8. ஏழேழு ஜென்ம பாவங்கள் போக்கும்
பாலாவிக் கரையுறை கேதீஸ்வரா (கே)

9. ஐந்துதேர் ஓடும் அழகினைக் காணுமெம்
அல்லல்கள் தீர்ப்பாய் கேதீஸ்வரா (கே)


அகம் குளிர அருளும்
அம்மை அப்பன் திருக்காட்சி



உற்சவகால எழுந்தருளி மூர்த்திகள்



பக்தோற்சவம்

10. ஒப்புயர் வில்லா ஓங்காரப் பொருளே
உலகாளு மரசே கேதீஸ்வரா (கே)

11. ஓதுவார் ஓத உருகுவார் உருகவெம்
உணர்வெலாம் அறிவாய் கேதீஸ்வரா (கே)

12. ஔவைக்கு அருளும் பாவைக்கு உயிரும்
அருளிய சிவனே கேதீஸ்வரா (கே)

க

13. கண்கள் மூன்றுடை கற்பகக் கொழுந்தே
கருணைக் கடலே கேதீஸ்வரா (கே)

14. காலனை உதைத்த கால காலனே
காலடி சரணம் கேதீஸ்வரா (கே)

15. கிளர்ஒளி பரவி உளஇருள் அகல
கிருபைநீ காட்டு கேதீஸ்வரா (கே)

16. கீரனை நெற்றிக் கண்கொண் டெரித்த
தீரனே திருக்கேதீச்வரா (கே)

17. குற்றமும் குறையும் ஏற்றருள் நீயே
குவித்தன மிருகரம் கேதீஸ்வரா (கே)

18. கூர்வாளை யொத்த ஆகாத சேர்க்கை
கூடாமல் காப்பாய் கேதீஸ்வரா (கே)

19. கெடுவினை மாய கேடுகள் ஓய
சடுதியாய் வாவா கேதீஸ்வரா (கே)

20. கேதுவந் துன்னைத் தேடி வணங்கிட
கேட்டதருளினாய் கேதீஸ்வரா (கே)

21. கைதொழு மடியார் கடுவினை போக்கும்
கைலாய நாதனே கேதீஸ்வரா (கே)

22. கொடுவினை பிணிகள் கூடிடா வண்ணம்
காத்தெமக் கருள்வாய் கேதீஸ்வரா (கே)

23. கோடானு கோடி அடியவர்க் கருளும்
கேதார நாதா கேதீஸ்வரா (கே)

24. கௌரியோ டுடனுறை காவலன் நீயே
காப்பாய் எமையே கேதீஸ்வரா (கே)

ச

25. சக்தியாய் சிவமாய் பக்தரைக் காக்கும்
சதாசிவமே எம் கேதீஸ்வரா (கே)

26. சாபமும் நீங்க பாவமும் நீங்க
யோகமே அருள்வாய் கேதீஸ்வரா (கே)

27. சிவசிவ என்று உருகிடும் அடியார்
சிந்தையில் உறையும் கேதீஸ்வரா (கே)

28. சீதளக் காற்றே என்ஆதார மூச்சே
சிவபெரு மானே கேதீஸ்வரா (கே)

29. சுற்றமும் நீயே சுகமும் நீயே
சித்தத்தில் வைத்தேன் கேதீஸ்வரா (கே)

30. சூழ்ச்சிசெய் மாந்தர் வீழ்ச்சியுற் றோட
சூழ்ந்தெமைக் காப்பாய் கேதீஸ்வரா (கே)

31. செம்மணச் செல்விதன் பங்கினை யடைக்கப்
பிரம்படி பட்டாய் கேதீஸ்வரா (கே)

32. சேவடி துதிக்க ஆவலோ டருளும்
ஆவுடை அப்பா கேதீஸ்வரா (கே)

33. சைவமும் தமிழும் கண்ணெனப் போற்றும்
சிவபூமி ஆளும் கேதீஸ்வரா (கே)

34. சொற்றமிழ் பாடெனப் பணித்ததால் சுந்தரர்
நற்றமிழ் பெற்றனம் கேதீஸ்வரா (கே)

35. சோதியாய் நின்று ஆதியும் அந்தமும்
நீயெனக் காட்டினாய் கேதீஸ்வரா (கே)

36. சௌமிய மூர்த்தியே கேதீஸ்வரா
சௌபாக்கிய மருள்வாய் கேதீஸ்வரா (கே)

## த

37. தந்தையும் நீயே தாயும் நீயே
எந்தையே இறைவா கேதீஸ்வரா (கே)

38. தாய்மடி தந்து பன்றிக்கு நீயே
பாலூட்டி மகிழ்ந்தாய் கேதீஸ்வரா (கே)

39. திங்களைக் கங்கையை சடைதனில் சூடிய
திருச்சிற்றம்பலமே கேதீஸ்வரா (கே)

40. தீராத வினையும் தீர்த்தாங்கு அருளுமுன்
பாலாவித் தீர்த்தம் கேதீஸ்வரா (கே)

41. துரத்திடும் வினையை விரட்டியெம்
வாழ்வைக்
காத்திடும் தெய்வமே கேதீஸ்வரா (கே)

42. தூக்கிய பாதமும் கிண்கிணி நாதமும்
கூத்திடக் காண்கிறோம் கேதீஸ்வரா (கே)

43. தென்முகக் கடவுளாம் நின்முகம் காண
துன்பங்கள் விலகுமே கேதீஸ்வரா (கே)

44. தேவருக்கு அமுதம் அளித்திட அன்று
விடமள்ளி யுண்டாய் கேதீஸ்வரா (கே)

45. தைதொம் தைதை தகதிமி தொம் என
கால்தூக்கி ஆடிடும் கேதீஸ்வரா (கே)

46. தொண்டர்கள் நாள்தோறும் வந்து
வணங்கிட
துலங்கிடும் மூர்த்தியே கேதீஸ்வரா (கே)

47. தோடணி செவியும் தோள்கள்மீ தரவும்
நீறணி வடிவே கேதீஸ்வரா (கே)

ந

48. நதியொடு திங்கள் முடிமே லணிந்த
முக்கண் முதல்வா கேதீஸ்வரா (கே)

49. நான்முகன் கார்வண்ணன் காணுதற்
கொண்ணாப்
பேரொளிப் பிளம்பே கேதீஸ்வரா (கே)

50. நிலையில்லா உலகில் நிலையான செல்வம்
நீயன்றி யேது கேதீஸ்வரா (கே)

51. நீலமார் கடலின் விடந்தனை யுண்ட
நீலகண்டனே கேதீஸ்வரா (கே)

52. நுண்ணறி வாலுன் மெய்ப்பொருள் காணும்
நுட்பமும் அறியேன் கேதீஸ்வரா (கே)

53. நூதன மாயிப் பூதலம் ஆளுமுன்
சூட்சுமம் சொல்வாய் கேதீஸ்வரா (கே)

54. நெஞ்சினை வாட்டும் நீங்காத துன்பம்
போக்கிட வழிசொல் கேதீஸ்வரா (கே)

55. நேற்றைய இடர்கள் நேற்றோடு அகல
இன்றெமக்கருள்வாய் கேதீஸ்வரா (கே)

56. நைந்துளம் உருகும் அன்பர்கள் தமக்கு
நீயன்றி யார்துணை கேதீஸ்வரா (கே)

57. நொந்ததும் ஏனோ நோவதும் ஏனோ
வாழ்விது தானோ கேதீஸ்வரா (கே)

58. நோய்நொடி யின்றி நீடுநாம் வாழ
நீதயை புரிவாய் கேதீஸ்வரா (கே)

ப

59. படமெடுத் தாடிடும் பாம்பினை அணிந்த
பார்வதி மணாளா கேதீஸ்வரா (கே)

60. பாவங்கள் தீர்க்கும் பாலாவித் தீர்த்தம்
பருகினால் மோட்சம் கேதீஸ்வரா (கே)

61. பிறைசூடும் நாதா விடையேறி வாவா
பிஞ்ஞகனே எங்கள் கேதீஸ்வரா (கே)

62. பீடைகள் நீங்கவுன் சடைமுகம் காட்டிடு
போதுமே எனக்கது கேதீஸ்வரா (கே)

63. புண்ணிய பூமியாம் புனிதப் பதியுறை
பூர்வீக நாதனே கேதீஸ்வரா (கே)

64. பூராய வாழ்வினை ஆராயும் விந்தை
புரிந்திட வைப்பாய் கேதீஸ்வரா (கே)

65. பெருந்தன்மை யோடெம் பிழைபொறுத்
தருளும்
பெருந்தகை நீயே கேதீஸ்வரா (கே)

66. பேசாத பெண்ணைப் பேசவைத் தற்புதம்
புரிந்த வனேதிருக் கேதீஸ்வரா (கே)

67. பைந்தமிழால் என் பரம்பொருளே
உன்னைப்
பாடுதல் எளிதோ கேதீஸ்வரா (கே)

68. பொன்னார் மேனியில் புலித்தோல் அணிந்த
பெருமானே திருக்கேதீச்வரா (கே)

69. போற்றி நின்புகழ் பாடிடும் பாக்கியம்
போதுமென் வாழ்வினில் கேதீஸ்வரா (கே)

70. பௌர்ணமி நிலவாய்ப் படரிருள் விரட்டும்
பேரொளிப் பிளம்பே கேதீஸ்வரா (கே)

ம

71. மண்டோ தரிவந்து மனதார வழிபட்டுச்
சிந்தை மகிழ்ந்தபதி கேதீஸ்வரா (கே)

72. மார்க்கண்டேயர் மனக்குறை தீர்த்து
ஆட்கொண்டருளினை கேதீஸவரா (கே)

73. மின்னும் செஞ்சடை மிளிரும் புன்னகை
கண்ணில் கனிவுடை கேதீஸ்வரா (கே)

74. மீண்டும் மீண்டும் வணங்கிடத் தோன்றும்
மோகன வடிவே கேதீஸ்வரா (கே)

75. முற்றாத திங்கள் முடிமேல் அணிந்த - எம்
சொத்தே சுகமே கேதீஸ்வரா (கே)

76. மூவராய் இருவராய் முக்கண் மூர்த்தியாய்
காவலாய் நீதான் கேதீஸ்வரா (கே)

77. மெத்தனப் போக்கு கூத்தனிற் கெதற்கு
எழுந்து நீ வாராய் கேதீஸ்வரா (கே)

78. மேதாவித் தனங்கள் நீராவி போல
காணாமற் போகட்டும் கேதீஸ்வரா (கே)

79. மையிருள் போக்கி மெய்யடியார்க்கு
நல்வழி காட்டு கேதீஸ்வரா (கே)

80. மொட்டவிழ் மலர்நிறை பொழில்சூழ்
மாந்தை
சிட்டனே சிவனே கேதீஸ்வரா (கே)

81. மோகன வடிவே ஆகமப் பொருளே
ஆனந்தத் தேனே கேதீஸ்வரா (கே)

82. மௌனமேன் இன்னும் எம்குறை போக்க
மனமிரங்காயோ கேதீஸ்வரா (கே)

## வ

83. வந்து நீ உறைந்தாய் தேன்பொந்து என்று
விளங்கிடும் பதியில் கேதீஸ்வரா (கே)

84. வாராது வந்த வரம்போல உன்னை
பாடவரம் அளித்தாய் கேதீஸ்வரா (கே)

85. விரைகழல் சரணென வழிபடும் போதிலுன்
விழிமடல் திறந்துவா கேதீஸ்வரா (கே)

86. வீழ்ந்தாலும் மீட்பாய் தாழ்ந்தாலும்
காப்பாய்
வாழ்நாளில் மறவேன் கேதீஸ்வரா (கே)

87. வெய்ய வினையறுத்து வேண்டுதல் ஏற்கும்
செய்ய சடைமுடி யானே கேதீஸ்வரா (கே)

88. வேதம் ஓத வெண்மணல் சிவமாய்
விளங்கிட வைத்தாய் கேதீஸ்வரா (கே)

89. வைரம் போலுளத் தைரியம் தாதா
வைத்தீஸ்வரனே கேதீஸ்வரா (கே)

## அ

90. அம்மை அப்பனாய் ஆண்டிடும் தேவே
உண்மை ஒளியே கேதீஸ்வரா (கே)

91. ஆழிசூழ் இலங்கை வடமேற் திசையில்
அருட்தலம் கொண்டாய் கேதீஸ்வரா (கே)

92. இத்தனை காலம் பட்டது போதும்
இன்னுமா துயரம் கேதீஸ்வரா (கே)

93. ஈண்டெனக் குதவிட உந்தனைத் தவிர
வேறெவர் தானுளர் கேதீஸ்வரா (கே)

94. உமையொடு பாகா உறுதுணை தாதா
உன்தயை வேண்டும் கேதீஸ்வரா (கே)

95. ஊழியைத் தீயை அடக்கிய இறைவா
உந்தனால் முடியும் கேதீஸ்வரா (கே)

96. எருதுடை யானே விரிசடை யோனே
எம்பெரு மானே கேதீஸ்வரா (கே)

97. ஏகுண்ட வாசன் சோதரி யோடு
எருதேறி வாவா கேதீஸ்வரா (கே)

98. ஐம்புலன் அடக்கி நின்பதம் துதிக்கும்
அன்பருக்கு அருள்தா கேதீஸ்வரா (கே)

99. ஒவ்வொரு கணமும் உன்னையே நினைத்து
உருகுதே எம்மனம் கேதீஸ்வரா (கே)

100. ஓம்நமசி வாயா ஓம்நமசி வாயா
ஓதுகின் றோமே கேதீஸ்வரா (கே)

101. ஔடத மாயெம் மனக்குறை தணிக்கும்
அற்புத மருந்தே கேதீஸ்வரா (கே)

## ந

102. நந்தியே விலகி நந்தனார் வணங்க
நல்லருள் புரிந்ததே கேதீஸ்வரா (கே)

103. நாயன்மார்க் கெல்லாம் காட்சி அருளினை
நம்மையேன் மறந்தாய் கேதீஸ்வரா (கே)

104. நினைத்தவாறு உன்னை அடைந்திட
உமையாள்
நெடுந்தவம் புரிந்தாள் கேதீஸ்வரா (கே)

105. நீதவம் கண்டு நெகிழ்ந்ததால் அன்னை
நினையடைந் தாளே கேதீஸ்வரா (கே)

106. நுண்ணியனே எங்கள் புண்ணியனே
எமக்குன்
தாட்சண்யம் காட்டு கேதீஸ்வரா (கே)

107. நூலிழை அறாதெம் வாழ்வினைக் காக்க
நுன்தயை வேண்டும் கேதீஸ்வரா (கே)

108. நெஞ்சமும் தேனாய் இனிக்குதே உன்னால்
பாமாலை ஏற்றருள் கேதீஸ்வரா (கே)

கேதீஸ்வரா நம கேதீஸ்வரா நம
கேதீஸ்வரா நம கேதீஸ்வரா

# நன்றியுடன் நான்

அம்மை அப்பன் அருட் பாமாலை,
இது ஒரு வரம், தவம்
விடையேறும் பெருமானைப், பெருமாட்டியைப்
பாடக் கிடைத்ததே ஒரு கொடைதான்.
அடைந்த ஆனந்தம் அதிகம்.
ஈரடிகளுக்குள் இறைவனைப் பாடும்பேறு.
எழுதும் போதெல்லாம் சீர்படுத்திச் செம்மையாக்கி
முழுமை பெறச் செய்தவர்
என் அன்புக்கினிய மாமனார்
திரு.வே.பொ. மாணிக்கவாசகர் அவர்கள்.
காரணம் திருமதி மாணிக்கவாசகர் அவர்கள்.
அம்மை அப்பன் இல்ல அம்மையாரின் பேரவாவை
உண்மையாக்கி உருப்பெற வைத்துள்ளார்கள்
இவர்கள்.
நற்பணிகளுக்கெல்லாம் நடுநாயகனாய் விளங்கும்
டாக்டர் ஜெயேந்திரன் நமசிவாயம் அவர்களின்
அறப்பணிக்கு நல்ல சான்று -
இப்பாமாலைப் பொக்கிஷம்.
நாவினிக்க நாயன்மார் பாடக் கேட்ட நம்பிரான்,
நம் பாடல்கள் கேட்டு ஆசீர்வதிக்கட்டும் - நம்மையும்.
நூலை அழகுசெய்த நோபிள் அச்சகத்துக்கும்
மொத்தத்தில் இந்நூல், இசை வெளியீடு போன்றன
வெளிவர சித்தம் கொண்டு உழைத்த
அத்தனை பேருக்கும் நன்றிகள்!


அன்புடன்

**வேலணையூர் சுரேஷ்.**

கைநூல் வெளியீடு

# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

## 25 ஆவது ஆண்டின் நீங்காத நினைவில்



அம்மை அப்பன் அருட்பாமாலை கைநூல்
அமரர் சரண்யா மாணிக்கவாசகர்
நினைவாக...

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, மனம் ஆறாத துயரத்தையும், ஐந்தே ஆண்டுகள் இம்மண்ணில் வாழ்ந்த நீங்காத நினைவுகளையும் தந்து மறைந்து விட்ட எமது அன்புச்செல்வி சரண்யாவை நினைவுகூர்ந்து...

மன்னார் திருக்கேதீச்சரம்
கௌரி அம்பாள் உடனுறை
திருக்கேதீச்சரப் பெருமான்
மகிழும்
அம்மை அப்பன் அருட்பாமாலை.



இறைபுகழ் பாடும் இனிய கீர்த்தனம்.